உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# திருநாங்கூர் சேந்தனார் சரித்திரம்.

## திருவிசைப்பா.

## திருப்பல்லாண்டு.

## திருவிடைக்கழி.



பாகராஜன் கம்பெனி,

தமிழ்த் திருமறைக் கழகம்.

12, தம்புசெட்டித் தெரு :: :: சென்னை.

விலை] 1939 [பை 6

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்



உலகுய்யசதா ஆனந்தத் தாண்டவம்
புரியும் சிவபெருமான்



ச க் தி

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

# திருநாங்கூர் சேந்தனார் சரிதம்

சோழ நாட்டிலே காவிரிப்பூம் பட்டினத்தில் பட்டினத்துச் சுவாமிகள் திருவவதாரம் செய்திருந்தார்கள். "காலம் வரவே காதல் செய்மின்" என்றாற்போல சிவனருள் கூடுதலால் நமது இறைவன் ஓர் பரதேசி திருக்கோலம் தாங்கி பட்டினத்தார் முன் தோன்றி "காதற்ற ஊசியும் வாராது காணுங் கடை வழிக்கே" என்ற திருப்பாடலை வரைந்த ஓர் ஓலையைத்தந்து மறைந்தனர். கருணைப்பார்வையினால் ஞானம் அடைந்த நமது பட்டினத்துச் சுவாமிகள் துறவியாகப்போக நினைத்துத் தனதுபிரதான காரியஸ்தர் ஆகிய சேந்தனாரை அழைத்து தமது நவநிதிக் களஞ்சியங்களைக் கொள்ளையிடத் திறந்து விடுமாறு கட்டளையிட்டார். ஷை காரியஸ்தர் சில களஞ்சியங்களைத் திறந்து விட்டு மற்றவைகளைத் திறவாமல் நிறுத்தினார். இதை உணர்ந்த அவ்வூர் அரசன் நமது சேந்தனாரை வரவழைத்துச் சிறைச்சாலையில் அடைத்தான். அவருடைய வீடுகளையும் திரவியங்களையும் கொள்ளையிடச் செய்தான். சிலநாள் சென்றபின் கற்பிற் சிறந்த அவர் மனைவியாரும் அவர் அருமை இளம் புதல்வனும் அங்கு இருக்கச் சகியாமல் அடுத்த கிராமத்திற் சென்று கூலிவேலை செய்து காலம் கழிக்க நேரிட்டது.

அங்கு சேந்தனார் மனைவியார் சில பிரபுக்களின் உதவியால் குழந்தையைக் கல்விச்சாலைக்கு அனுப்பி வந்தார். அங்கு அக்கல்விச்சாலையில் நேரிட்ட விளையாட்டுப் பிள்ளைகளால் நேரிட்ட சச்சரவால் சேந்தனார் குமாரனுக்கு கவலை ஏற்பட தன் தாயிடம் வந்து தன்னுடைய வரலாற்றைச் சொல்லுமாறு அழுதான். அம்மையார் குழந்தையின் அழுகையைத் தணிக்கத் தன் பர்த்தாவாகிய சேந்தனாருக்கு நேரிட்ட கெடுதிகளைச் சொல்ல குமாரன் தன் தாயை அழைத்துக்கொண்டு, பட்டினத்துச் சுவாமிகளைத் தேடிக் காட்டில் ஓர் குளக்கரையில் நிஷ்டையில் இருக்கும் பட்டினத்தாரைக்கண்டு சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து சேந்தனார் சிறைச்சாலையில் இருப்பதாயும் அவரை மீட்டுக் கொடுக்குமாறு பிரார்த்தித்தார்கள். துக்கத்துடன் தோன்றும் சேந்தனார் மனைவியை

யும் குமாரனையும் கருணையால் நோக்கி தாங்கள் கவலைப்பட வேண்டியதில்லை என்றும் மறுநாட் காலை சேந்தனார் தங்கள் இடத்திற்கு வந்துசேருவார் என்றும் அவர்களை தங்கள் இல்லம் போமாறும் கட்டளை இட்டார். பிறகு அவர்கள் ஒருவாறு தேர்தலாகித் தமது கிராமத்திற் சென்று அன்றிரவு கழித்து மறுநாட் காலை தாங்கள் எதிர் பார்த்திருந்த சேந்தனார் வராமல் இருப்பதைக் கண்டு மனம் நொந்து மறுபடியும் பட்டினத்தடிகள் முன் சென்று தமது சேந்தனார் வரவில்லை என்று கவலைப்பட்டார்கள். பட்டினத்தடிகள் நிஷ்டையிலிருந்து தெளிந்து சேந்தனாருடைய மனைவியையும் குமாரனையும் கண்டு சிறு பிள்ளையைப் பார்த்து ஓர் எழுத்தாணியும் பனையோலையும் கொண்டு வரச்சொல்லி அக்காட்டிற்கு அருகாமையிலிருக்கும் திருச்செங்காட்டூரில் கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமானுக்கு

"மத்தளை தயிர் உண்பானும்
மலர்மிசை ஏகி னானும்
நித்தலும் தேடிக் காணா
நிமலனே நீ போய் இன்று
செய்த்தலை கயல்பாய்
நாங்கூர் சேந்தனை வேந்த னிட்ட
கைத்தளை நீக்கி என்முன்
காட்டுவன் காட்டு ளானே".

என்ற செய்யுள் வரைந்த ஓர் ஏட்டைத் தந்து சுவாமி சந்நிதானத்தில் வைத்துத் தொழுமாறு கட்டளை யிட்டார்.

பட்டினத்தடிகள் உத்திரவுக்கிணங்க சுவாமி சந்நிதானத்தில் சமர்ப்பித்துப் பிரார்த்தித்தனர். அடியார்களினுடைய மகிமையை வெளிப்படுத்த நமது கடவுளின் ஆஞ்ஞைப்படி ஓர் சிவபூதகணம் நமது சேந்தனாரைக் கைத்தளை நீக்கி சேந்தனாரை கடவுள் முன் தோன்றச் செய்தது. அங்கு எதிர்ப்பார்த்திருந்த மனைவியும் மைந்தனும் பரமானந்தத்தால் நமது கடவுளை மெய்யன்புடன் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து அநுக்கிரகம் பெற்றுப் பிறகு பட்டினத்துச் சுவாமிகளை காட்டில் தரிசித்தனர்.

அங்கு ஆனந்த நிஷ்டையில் தெளிந்த பட்டினத்தார் கருணைப் பார்வையால் தன்னுடைய பிரதான காரியஸ்தர் ஆகிய சேந்தனையும் அவர் மனைவி மைந்தனையும் நோக்கினார். அவர்கள் தன்

அடியில் சாஷ்டாங்க நமஸ்காரம் செய்து மரம்போல் இருப்பதை யும் பார்த்தார். அவர்கள் தெளிந்து எழுந்து பட்டினத்துச் சுவாமிகள் இடமே இருந்து திருத்தொண்டு புரிய வேண்டினார்கள். அதற்கு அவர் இசையாமல் அவர்கள் நாட்டிற்குச் சென்று சிவ பெருமானை வழிபடுமாறும் தினந்தோறும் தாங்கள் அருந்துமுன் ஓர் சிவனடியார்க்கு அமுது அளித்து உண்ணும்படியும் கட்டளை இட்டார். அக்கட்டளையைத் தாங்கிய சேந்தனாரும் அவர் சந்ததியும் அடுத்த கிராமத்திற்குச் சென்று விறகு வெட்டி தினந்தோறும் திரு ப்புலியூர் என்ற சிதம்பரத்தில் விறகு விற்று அக்கூ லியைக்கொ ண்டு உணவுக்கு வேண்டியவைகளைச்சேகரித்து அமுது செய்யுமுன் ஓர் சிவனடியாருக்குத் திருவமுது செய்வித்துத் தாம் புசிப்பது வழக்கம்.

இப்படி நிகழும் காலத்தில் மார்கழி மாதத்தில் ஓர் நாள் அதிக மழையில் உலர்ந்த விறகு கிடைக்காமல் ஈரமான விறகுகளை வெட்டிக் கட்டி வீதியில் அன்று காலை முதல் மாலை வரையில் வாங்குபவர் இல்லாமல் துக்கித்த சேந்தனார் நமது பட்டினத் தடிகளையும் நடராஜப் பெருமானையும் உள்ளத்தில் தியானம் செய்து வீதிதோறும் திரிந்தார். அங்கு ஓர் அம்மையார் சேந்த னாரை அழைத்து தாம் விறகு சுமை வாங்கிக்கொள்ள முடியும் என்றும் தம்மிடம் பணம் இல்லை என்றும் அதற்கு பதிலாக அரிசி மா முதலியன கொடுப்பதாகவும் சொன்னார்கள். அதற்கிசைந்த சேந்தனார் ஷை அம்மையார் கொடுத்ததை வாங்கி தம்முடைய முன்றானையில் கட்டிக்கொண்டு பிறகு அதிக மழையாய் இருப்ப தால் தம்முடைய மனைவியும் குழந்தையும் வேறு எங்கும் போக முடியாது என்றும் அம்மையாருடைய மாட்டுத் தொழுவத்தில் காலம் கழிக்க உத்தரவு வேண்டுமென்றும் பிரார்த்தித்தார். அம்மையாரும் இருக்க அனுக்கிரகித்தார். அன்று சேந்தனாரின் மனைவியார் அரிசி மாவை அதிக ருசியாக களியாகச் செய்தார் கள். செய்தவுடன் தனது பர்த்தா சேந்தனாரிடம் ஓர் சிவனடி யாரைத் திருஅமுது செய்ய அழைத்து வருமாறும் வேண்டினார்.

சேந்தனார் அநேக இடங்களில் தேடி அடியார் கிடைக்காமை யால் துக்கித்துத் தில்லையில் கோயில் கொண்டு இருக்கும் நடராஜர் சன்னிதியை நோக்கிச் சென்று கோயிலில் புகுந்தார். அங்கு எவரும் தோற்றாமல் ஓர் மண்டபத்தில் நமது கருணாநிதியாகிய நடராஜப்பெருமான் ஓர் திருவிளையாடல் காட்ட வயோதிகச் சிவ னடியார் போல சில மந்திரத்தை ஓதிக்கொண்டு குளிரால் சகிக்க முடியாதார் போலத் தோன்றினார். இதைக் கண்ணுற்ற சேந்தனார்

கவலை நீங்கி அடியாரை நமஸ்கரித்துத் தமது இல்லத்திற்குத் திருவமுது செய்ய வரவேண்டும் என்று பிரார்த்தித்தார். அதற்குக் கடவுள் தான் அதிக முதிர்ந்தவன் என்றும் நடக்கக்கூடத் தன்னால் முடியாது என்றும் வெளியில் வந்தால் தன்னால் குளிர் தாங்க முடியாது என்று தெரிவித்ததைக் கேட்ட சேந்தனார் அடியாருக்கு வேண்டிய திருத்தொண்டுகள் தாம் செய்வதாகவும் தம் முதுகின் மேல் ஏறிக்கொண்டு இருப்பிடத்திற்கு வரவும் பிரார்த்தித்தார். அடியாரும் முதுகில் ஏறினார். சேந்தனாரும் சுமந்து சென்றார். எதிர் பார்த்திருந்த சேந்தனார் மனைவியாரும் அடியாரை அழைத்துக் கொண்டுபோய் விறகுகளைக் கொளுத்திக் குளிர் காயச்செய்தார்கள். வென்னீரால் திருப்பாதங்களையும் கரங்களையும் கழுவினார்கள். பிறகு திருவமுதுக்கு தயாராய் இருந்த களியை அடியாரை திருவமுது செய்யப் பிரார்த்தித்தார்கள். அடியார்களுக்கு என்று நாள்தோறும் நாலில் ஒரு பங்கு என்றதை முதலில் திரு அமுது செய்ய வைத்ததைக் கண்ட நமது திருவிளையாடல் காட்ட வந்த கடவுள் உண்டு அதிக சுவையாய் இருப்பதால் தனக்கு பசி அடங்கவில்லை என்றும் இன்னும் கிடைக்குமா என்று கேட்க அம்மையார் தம் பங்கையும் கொடுத்தார் அதையும் உண்டார், பசி தீரவில்லை. சேந்தனார் பங்கையும் உண்டார். பசி தீரவில்லை; பிறகு இன்னும் இருக்குமோ என்று கேட்க சேந்தனார் குமாரனும் தன் பங்கையும் அடியார்களுக்குக் கொடுக்கும்படி தாயை வேண்டினார். அதையும் வாங்கியுண்ட நடராஜப்பெருமான் திடீரென மறைந்தார். மறைந்ததுகண்ட சேந்தனாரும் அவர் சந்ததியாரும் திகைத்தார்கள். நமது கடவுளும் சேந்தனாருடைய திறத்தையும் அடியார் பக்தியையும் வெளிப்படுத்தத் தனது சந்நிதானத்தில் வீற்றிருக்கும் பார்வதிதேவி முதலாக சர்வ தேவர்களுக்கும் சகல ரிஷிகளுக்கும் இக்களியைக் கொடுத்து ஆனந்தத் தாண்டவம் ஆடினார்.

மறுநாள் வழக்கம்போல் உஷத் கால பூஜைக்கு வந்த தில்லை வாழ் அந்தணரில் ஒருவர், ஒவ்வொரு விக்கிரகத்தின் பேரிலும் நடராஜப் பெருமான் இடத்தும் களி சிந்திக்கடந்ததைக் கண்டு அச்ச முற்று அந்தணர்கள் கூட்டத்திற்குத் தெரிவிக்கக் கூட்டம் கூடினார்கள். பிறகு சேந்தனாரால் இச் செய்கை ஏற்பட்டதென்று தெரிந்து அவரைத் தேடிப்போய் அவரை நோக்கி நடந்ததைத் தீர விசாரிக்க நடராஜப் பெருமானே தன் இல்லத்திற்கு வந்து களி உண்டதாகத் தெரிவித்தார். பிறகு அச்சபையில் ஓர் அந்தணர் அஃது உண்மையாய் இருக்குமாயின் இப்போது பிரம்மோச்சுவ காலமாக இருக்கின்றது சில வருஷங்களாக ரதோற்சவம் ஆள்கள் இல்லாமல் தடைப்பட்டு இருக்கிறது. நாங்கள் ரதோத்

சவ தினத்தன்று நடராஜப் பெருமானுக்கு அலங்காரம் செய்து ரதத்தில் ஆரோகணம் செய்வோம். உமது பக்தி வைராக்கியம் வெளிப்படுத்த நீர் ரதத்தை நாலு வீதிகளிலும் ஒருவர் தொட்டு இழுக்காமல் வலம் வந்து தன்னுடைய நிலையில் நிற்கச்செய்ய வேண்டும் என்றும் தெரிவித்தார். நமது சேந்தனார் பட்டினத்தடிகளையும் நடராஜப்பெருமானையும் அகக்கண்ணால் நோக்கித்தான் செய்வதாக ஒப்புக்கொண்டார். ரத மகோத்சவத்தன்று ஸ்நானம் செய்து திருநீறு அணிந்து உருத்திராக்ஷம் தாங்கி சிவ மந்திரம் ஓதிக்கொண்டு ரதத்தின் முன்பாகத் தோன்றி நடராஜப்பெருமானைப் பிரார்த்தித்தார். ரதம் தன் நிலை விட்டுப்பெயருமுன் "மன்னுகதில்லை வளர்கநம் பத்தர்கள்" என்று திருப்பல்லாண்டு ஆரம்பிக்க, ரதம் நாலு வீதிகளிலும் சென்று தன் நிலையில் வந்து நின்றது. பிறகு சேந்தனாரும் அவர் சந்ததியாரும் நமது நடராஜப் பெருமானால் ஆட்கொள்ளப்பட்டார். அன்று முதல் இன்றுவரை திருவாதிரை நாள் அன்று சேந்தனார் நடராஜப்பெருமானுக்கு அளித்த களியை நாமும் நம் அடியார்களும் நடராஜப்பெருமானுக்கு நிவேதித்து சேந்தனாரைப்போல் வாழ்ந்து வருவோமாக.

திருச்சிற்றம்பலம்

## திருநாங்கூர் சேந்தனார் திருத்தொண்டின் சிறப்பு

அவிழ்ந்த துணியி லவிழ்ந்த அமுதை
யவிந்த மனதோ டளித்த—அவிழ்ந்தசடை
வேந்தனார்க் கின்னமுத மாயிற்றே மெய்ப்பத்தி
சேந்தனார் செய்த திறம்.

(உமாபதிசிவாசாரியார்)

---

ஸ்ரீ நடராஜப் பெருமானின் இரதத்திற்கு வடம் பூட்டாமலும், ஒருவர் தொட்டிழுக்காமலும், நான்கு வீதியுந் தானாக ஓடிவந்து நிலை சேரும்படி * திருநாங்கூர் சேந்தனாரால் அருளிய (அற்புத) திருப்பல்லாண்டு.

சேந்தனாரருளிச் செய்த

## (கோயில்—திருப்பல்லாண்டு—பண்—பஞ்சமம்)

திருச்சிற்றம்பலம்

மன்னுக, தில்லைவளர்க, நம்பக்தர்கள், வஞ்சகர், போயகலப், பொன்னின், செய்மண்டபத்துள்ளே, புகுந்து, புவனியெல்லாம், விளங்க, அன்னநடை, மடவாளுமைகோ, னடியோமுக், கருள் புரிந்து, பின்னைப், பிறவியறுக்க, நெறிதந்த, பித்தற்குப், பல்லாண்டு கூறுதுமே. (1)

மிண்டு மனத்தவர் போமின்கண் மெய்யடியார்கள் விரைந்து வம்மின் கொண்டுங் கொடுத்துங் குடிகுடியீசர்க்காட் செய்மின் குழாம்புகுந் தண்டங்கடந்த: பொருளளவில்லதோ ரானந்த வெள்ளப்பொருள் பண்டுமின்று மென்று முள்ள பொருளென்றே பல்லாண்டு கூறுதுமே. (2)

நிட்டையிலா வுட னீத்தென் னையாண்ட நிகரிலாவண்ணங் களுஞ் சிட்டன்சிவனடியாரைச் சீராட்டுந்திறங்களுமே சிந்தித் தட்டமூர்த்திக் கென்னகநெகவூறுறுமமிர்தினுக்காலநிழற் பட் டனுக் கென்னைத் தன்பாற் படுத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (3)

சொல்லாண்ட சுருதிப்பொருள் சோதித்த தூய்மனத் தொண்டருள்ளீர் சில்லாண்டிற்சிதையுஞ் சிலதேவர்சிறுநெறி சேராமே வில்லாண்டகனகத்திரண் மேருவிடங்கன் விடைப் பாகன் பல்லாண்டென்னும் பதங் கடந்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே (4)

புரந்தரன் மாலயன் பூசலிட்டோலமிட்டின்னம் புகலரிதா யிரந்திரந்தழைப்ப வென்னுயிராண்ட கோவினுக்கென்செயவல்ல மென்றுங் கரந்துங் கரவாதகற்பகனாகிக் கரையில்கருணைக்கடல் பரந்துநிரந்தும் வரம்பிலாப்பாங்கற்கே பல்லாண்டுகூறுதுமே. (5)

சேவிக்க வந்தயனிந்திரன் செங்கண்மாலெங்குந் திசைதிசை யன கூவிக்கவர்ந்து நெருங்கிக் குழாங்குழாமாய்நின்று கூத் தாடு மாவிக்கமுதை யென்னார்வத்தனத்தினை யப்பனையொப் பமரர் பாவிக்கு பாவகத்தைப் புறத்தானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (6)

சீருந்திருவும் பொலியச் சிவலோகநாயகன் சேவடிக்கீ ழாரும்பெறாத வறிவுபெற்றேன் பெற்றதார் பெறுவாருலகி லூரு முலகுங் கழறவுழறியுமைமணவாளனுக்காட் பாரும்விசும்புமறி யும் பரிசு நாம் பல்லாண்டு கூறுதுமே. (7)

சேலுங்கயலுந் திளைக்குங் கண்ணாரிளங்கொங்கையிற் செங் குங்குமம் போலும் பொடியணிமார்பிலங்கு மென்றுபுண்ணியர் போற்றிசைப்ப மாலுமயனு மறியாநெறிதந்து வந்தென் மனத் தகத்தே பாலுமமுதமு மொத்துநின்றானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (8)

---

* ஓம்பு அமரர் என்பது—ஒப்பமரர் என நின்றது.

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான் மாலுக்குச்சக்கர மன்றருள்செய்தவன் மன்னியதில்லை தன்னு ளாலிக்கு மந்தணர் வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப் பாலித்து நட்டம் பயில வல்லானுக்கே பல்லாண்டுகூறுதுமே. (9)

தாதையைத்தாளற வீசியசண்டிக்கு மண்டத்தொடு முடனே பூதலத்தோர்கள் வணங்கப்' பொற்கோயிலும் போனக மூமருளிச் சோதிமணிமுடித் தாமமு நாமமுந் தொண்டர்க்கு நாயகமும் பாதகத்துக்குப் பரிசுவைத்தானுக்கே' பல்லாண்டு கூறுதுமே. (10)

குழலொலி யாழொலி கூத்தொலி யேத்தொலி யெங்குங் குழாம் பெருகி விழவொலி விண்ணளவுஞ்சென்று விம்மி மிகு திருவாரூரின் மழவிடையார்க்கு வழிவழியாளாய் மணஞ் செய் குடிப்பிறந்த பழவடியாரொடுங் கூடியெம்மானுக்கே பல்லாண்டு கூறுதுமே. (11)

ஆரார்வந்தா ரமரர்குழாத்தி லணியுடை யாதிரைநாள் நாராயணனொடு நான்முகனங்கி யிரவியு மிந்திரனுந் தேரார் வீதியிற்றேவர் குழாங்கடிசை யனைத்து நிறைந்து பாரார் தொல் புகழ்பாடியு மாடியும் பல்லாண்டு கூறுதுமே. (12)

எந்தை யெந்தாய்,சுற்றமுற்று மெமக்கமுதா, மெம்பிரா னென்று சிந்தை செய்யுஞ் சிவன் சீரடியாரடி நாய்செப்புரை அந்தமிலானந்தச் சேந்தனெனைப் புகுந்தாண்டு கொண்டாருயிர் மேற் பந்தம், பிரியப் பரிந்தவனேயென்று பல்லாண்டு கூறுதுமே. (13)

திருச்சிற்றம்பலம்

சிதம்பரத்தில் மார்கழித் திருவாதிரை நாளில் ஸ்ரீ நடராஜப் பெருமானுக்கு திருவமுதாக, திருக்களியை அன்புடன் அளித் தவர்.

ஷை சேந்தனார், திருநெறித் தமிழ் வேதமருளிய 27 மூர்த்திகளில் ஒருவர். திருவிசைப்பா—திருப்பல்லாண்டும் பாடி அருளியவர்.

சிவாலயங்களில் சேந்தனார்மூர்த்தியின் பிரதிஷ்டையும் மிக்க வேண்டத்தக்கது. ஆவணிமூலத்தில், பிட்டுத்திருவிழா செங் கமலச் செல்வியாகிய வந்திக்கிழவியாற் செய்த திருத்தொண்டை, கொண்டாடப்பட்டு வருவதுபோல் மார்கழி திருவாதிரை நாளில் சேந்தனார் அளித்த களி அமுதையும், கொண்டாடுகிறார்கள். பிரதி ஆலயங்களிலும்—மடாலயங்களிலும் இல்லங்கள்தோறும் கொண் டாடவேண்டும்.

**திருச்சிற்றம்பலம்**

# சேந்தனர் திருவிசைப்பா.

## 1. திருவீழிமிழலை.

**பண் பஞ்சமம்**

திருச்சிற்றம்பலம்

ஏகநாயகனை யிமையவர்க்கரசை
யென்னுயிர்க்கமுதினை யெதிரில்
போக நாயகனைப் புயல்வணற்கருளிப்
பொன்னெடுஞ் சிவிகையாவூர்ந்த
மேக நாயகனை மிகுதிருவீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயில்
யோக நாயகனை யன்றி மற்றொன்று
முண்டென வுணர்கிலேன் யானே. 1

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
கரையிலாக் கருணைமாகடலை
மற்றவரறியா மாணிக்க மலையை
மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றவெஞ்சிவனைத்
திருவீழிமிழலை வீற்றிருந்த
கொற்றவன்றன்னைக்கண்டுகண்டுள்ளங்
குளிரவென்கண் குளிர்ந்தனவே. 2

மண்டலத்தொளியை விலக்கியானுகர்ந்த
மருந்தை யென் மாறிலாமணியைப்
பண்டலரயன் மாற்கரிதுமாயடியார்க்
கெளியதோர் பவளமால்வரையை
விண்டலர் மலர்வாய்வேரிவார் பொழில் சூழ்
திருவீழிமிழலை யூராளுங்
கொண்டலங் கண்டத்தெங்குருமணியைக்
குறுக வல்வினை குறுகாவே. 3

தன்னடி நிழற்கீழென்னையுந்தகைத்த
சசிகுலாமவுலியைத்தானே
பொன்னிடைக் கமல மூன்றினுட்டோன்றி
யெழுஞ்செழுஞ்சுடரினையருள் சேர்
மின்னெடுங் கடலுள் வெள்ளத்தை வீழி
மிழலையுள் விளங்குவெண் பளிங்கின்
பொன்னடிக்கடிமை புக்கினிப் போக
விடுவனோ பூண்டு கொண்டேனே. 4

இத்தெய்வ நெறிநன்றென்றிருண்மாயப்
பிறப்பறு விந்திரசாலப்
பொய்த்தெய்வநெறிநான் புகாவகைபுரிந்த
புராண சிந்தாமணி வைத்த
மெய்த்தெய்வநெறி நான் மறையவர் வீழி
மிழலை விண்ணிழி செழுங்கோயி
லத் தெய்வ நெறியிற் சிவமலாதவரு
மறிவரோ வறிவுடையோரே. 5

அக்கனா வனைய செல்வமே சிந்தித்
தைவரோடழுந்தியானவமே
புக்கிடாவண்ணங் காத்தெனையாண்ட
புனிதனை வனிதை பாகனை யெண்
டிக்கெலாங் குலவும் புகழ்த்திருவீழி
மிழலையான்றிருவடி நிழற்கீழ்ப்
புக்கு நிற்பவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்தடிமை பூண்டேனே. 6

கங்கைநீரரிசிற்கரையிருமருங்குங்
கமழ் பொழிறழுவிய கழனித்
திங்களார்தீண்ட நீண்ட மாளிகை சூழ்
மாட நீடுயர் திருவீழித்
தங்குசீர்ச்செல்வத் தெய்வத்தான்றோன்றி
நம்பியைத் தன்பெருஞ்சோதி
மங்கையோர் பாகத் தென்னருமருந்தை
வருந்தி நான் மறப்பனோ வினியே. 7

ஆயிரங்கமல ஞாயிறாயிரமுக்
கண்முக கரசரணத்தோன்
பாயிருங் கங்கை பனிநிலாக்கரந்த
படர் சடைமின்னு பொன்முடியோன்
வேயிருந்தோளியுமை மணவாளன்
விரும்பிய மிழலை சூழ்பொழிலைப்
போயிருந்தேயும் போற்றுவார் கழல்கள்
போற்றுவார் புரந்தராதிகளே. 8

எண்ணில் பல்கோடி சேவடி முடிக
ளெண்ணில் பல்கோடி திண்டோள்க
ளெண்ணில் பல்கோடி திருவுருநாம
மோர்கொண் முக்கண் முகமியல்பு
மெண்ணில் பல்கோடி யெல்லைக்கப்பாலாய்
நின்றைஞ்ஞூற்றந்தணரேத்து
மெண்ணில் பல்கோடி குணத்தரேர் வீழி
யிவர் நம்மையாளுடையாரே. 9

தக்கன்வெங்கதிரோன் சலந்தரன் பிரமன்
சந்திரனிந்திரனெச்சன்
மிக்க நெஞ்சரக்கன் புரங்கரிகருடன்
மறலிவேளிவர்மிகை செகுத்தோன்
றிக்கெலா நிறைந்த புகழ்த்திருவீழி
மிழலை யான்றிருவடி நிழற்கீழ்ப்
புக்கிருந்தவர்தம் பொன்னடிக் கமலப்
பொடியணிந்தடிமை பூண்டேனே. 10

உளங்கொள மதுரக்கதிர்விரித்துயிர்மே
லருள் சொரிதருமுமாபதியை
வளங்கிளர்நதியுமதியமுஞ்சூடி
மழவிடை மேல் வருவானை
விளங்கொளி வீழிமிழலை வேந்தேயென்
றுந்தனைச் சேந்தன்றாதையை யான்
களங்கொளவழைத்தாற் பிழைக்குமோவடியேன்
கைக்கொண்ட கனக கற்பகமே. 11

பாடலங்காரப் பரிசில் காசருளிப்
பழுத்த செந்தமிழ் மலர் சூடி
நீடலங்காரத்தெம்பெரு மக்க
ளெஞ்சினுணிறைந்து நின்றானை
வேடலங்காரக் கோலத்தினமுதைத்
திருவீழிமிழலை யூராளுங்
கேடிலங் கீர்த்திக் கனககற்பகத்தைக்
கெழுமுதற் கெவ்விடத்தேனே. 12

திருச்சிற்றம்பலம்.

சேந்தனாருளிச் செய்த

## 2. திருவாவடுதுறை

### பண்பஞ்சமம்

திருச்சிற்சம்பலம்

பொய்யாத வேதியர் சாந்தை மெய்ப்புகழாளராயிரம் பூசுரர் மெய்யே திருப்பணிசெய் சீர்மிகு காவிரிக்கரைமேய வையா திருவாவடுதுறையமுதே யென்றுன்னை யழைத்தக்கால் மையார் தடங்கண் மடந்தைக்கொன்றருளா தொழிவதுமாதிமையே. (1)

மாதிமைமங்கலமேழும் பொழின்மணிமாட மாளிகைவீதிசூழ் சோதிமதிலணி சாந்தை மெய்ச்சுருதி விதிவழியோர் தொழு மாதியமரர் புராணனை மணியாவடுதுறை நம்பி நின்ற நீதியறிகிலள் பொன்னெடுந்திண்டோள் புணர நினைக்குமே. (2)

நினைக்கு நிரந்தரனேயென்னு நிலாக்கோலச் செஞ்சடைக் கங்கை நீர் நனைக்கு நலங்கிளர் கொன்றைமேனயம் பேசு நன்னுத லங்கைமீர் மனக்கின்ப வெள்ளமலைமகண் மணவாள நம்பி வண்சாந்தையூர் தனக்கின்பனாவடு தண்டுறைத்தருணேந்து சேகர னென்றுமே. (3)

தருணேந்து சேகரனே யெனுந்தடம் பொன்னித்தென்கரைச் சாந்தையூர்ப், பொருணேர்ந்த சிந்தையவர்தொழப்—புகழ் செல்வமல்கு பொற்கோயிலு, ளருணேர்ந்தமர் திருவாவடுதுறையாண்ட வாண்டகையம்மானே, தெருணேர்ந்த சித்தம் வலியவா திலகநுதல் விதிறத்திலே. (4)

திலகநுதலுமை நங்கைக்குந் திருவாவடுதுறை நம்பிக்குங் குலமடியவர்க் கென்னையாட்கொடுத்தாண்டு கொண்டகுணக்கட, லலதொன்றறிகின்றிலே மெனுமணியும் வெண்ணீறஞ்செழுத்த லால், வலதொன்றிலளிதற்கென் செய்கேன் வயலந்தண் சாந்தையர் வேந்தனே. (5)

வேந்தன் வளைத்தது மேருவில்லரவு நாண் வெங்கணை—செங் கண்மால் போந்த மதிலணிமுப்புரம் பொடியாட வேதப்புரவித் தேர் சாந்தை முதலயன் சாரதிகதியருளென்னுமித் தையலை யாந் தண்டிருவாவடுதுறையான் செய்கை யாரறிகிற்பாரே. (6)

கிற்போமெனத் தக்கன்வேள்வி புக்கெடுத் தோடிக்கெட்டவந் தேவர்கள், சொற்போலு மெய்ப்பயன் பாவிகாளென் சொல்லிச் சொல்லுமித்தூமொழி, கற்போன்மனங் கனிவித்த வெங்கருணையா வந்திடாயென்றுற், பெற்போ பெருந்திருவாவடு துறையாளி பேசாதொழிவதே. (7)

ஒழிவொன்றிலா வுண்மைவண்ணமு முலப்பில ஊறின்ப— வெள்ளமு மொழிவொன்றிலாப் பொன்னித்தீர்த்த முமுனிகோடி கோடியா மூர்த்தியு, மழிவொன்றிலாச் செல்வச் சாந்தையூரணியா வடுதுறையாடினு ளிழிவொன்றிலா வகையெய்தி நின்றிறுமாக்கு மென்னிளமானனே. (8)

மானேர் கலைவளையுங் கவர்ந்துளங்கொள்ளை கொள்ள வழக் குண்டே, தேனே யமுதே யென்சித்தமே சிவலோக நாயகச் செல்வமே யானே யலம்பு புனற்பொன்னிய ணியாவடு துறையன் பர்தங்கோனே நின் மெய்யடியார் மனக்கருத்தை முடித்திடுங் குன் றமே. (9)

குன்றேறந்தி கோகனதத்தயனறியா நெறியென்னைக் கூட்டினு யென்றேங்கியேங்கி யழைக்கின்ற விளவல்லியெல்லை கடந்தன ளன்றே சலம்புபுனற் பொன்னியணியாவடு துறையாடினுணன்றே மிவணம்பரமல்ல ணவலோக நாயகன் பாலளே. (10)

பாலுமமுதமுந் தேனுமாயானந்தந்தந்துள்ளே பாலிப்பான், போலுமெனுரு யிர்ப்போகமாம் புரகாலகாம புராந்தகன், சேலுங் கயலுந்திளைக்கு நீர்த்திருவாவடுதுறை வேந்தனோ டாலுமதற்கே முதலுமாமறிந்தோ மரிவை பொய்யாததே. (11)

திருச்சிற்றம்பலம்

பரிந்த செஞ்சுடரோ பரிதியோ மின்னோ பவளத்தின் குழவியோ பசும்பொன், சொரிந்த சிந்துரமோ தூமணித் திரளோ சுந்தரத்தரசிது வென்னத், தெரிந்த வைதிகர் வாழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ் நின்ற. வரிந்த வெஞ்சிலைக் கைமைந்தனை யஞ்சொல் மையல் கொண்டையுறும் வகையே. (7)

வகைமிகு மசுரர் மாளவந்துழிஞை வானமர் விளைத்த தாளாளன், புகைமிகு மனலிற்புரம் பொடிபடுத்த பொன்மலை வில்லிதன் புதல்வன், திகைமிகு கீர்த்தித்திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற் கீழ் நின்ற, தொகைமிகு நாமத்தவன் றிருவடிக் கென் றுடியிடை மடறொடங்கினளே. (8)

தொடங்கினள் மடலென் றணிமுடித் தொங்கற்புறவிதழாகிலு மருளா, விடங்கொளக் குறுந்திறத்திலு மிறைவன் மறத்தொழில் வார்த்தையு முடையன், திடங்கொள் வைதிகர் வாழ் திருவிடைக் கழியிற்றிருக்குரா நீழற் கீழ் நின்ற, மடங்கலை மலரும் பன்னிரு நயனத்தறுமுகத் தமுதினை மருண்டே. (9)

மருண்டுறை கோயின்மல்கு நன்குன்றப் பொலிவளர் மகிழ் திருப்பிடவூர்; வெருண்டமான் விழியார்க்கருள் செயாவிடுமே விடலையே யெவர்க்கு மெய்யன்பர், தெருண்ட வைதிகர் வாழ் திருவிடைக் கழியிற்றிருக்குரா நீழற்கீழ் நின்ற, குருண்ட பூங்குஞ்சிப் பிறைச்சடைமுடி முக்கண்ணுடைக் கோமளக்கொழுந்தே. (10)

கொழுந்திரள் வாயார் தாய் மொழியாகத் தூய்மொழியமரர் கோமகனைச், செழுந்திரட் சோதிச் செப்புறைச்சேந்தன் வாய்ந்த சொல்லிசை மாலையாமிவையே, செழுந்தடம்பொழில் சூழ் திருவிடைக் கழியிற் றிருக்குரா நீழற்கீழ்நின்ற, வெழுங்கதிரொளியை யேத்துவார் கேட்பாரிடர் கெடுமாலுலா மனமே. (11)

திருச்சிற்றம்பலம்

---

## ஐவர் திருநட்சத்திர தினங்கள்

பாடிய சம்பந்தர் வைகாசிமூலம் பயிலும் அப்பர்
நீடிய சித்திரை மாதச் சதயம் நிறைவன் தொண்டர்
ஆடியிற் சோதி திருவாதவூரர் நல்லானி மகம்
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசஞ் சிறந்தனரே.

### சந்தான குரவர் நால்வர் திருநட்சத்திரம்

சித்திரை யத்தமுமாபதி, யாவணித்திங்கடனி
லுத்திரஞ் சீர் கொண் மறை ஞானசம்பந்த, ரோது கன்னிச்
சுத்த மெய்ப்பூர மருணந்தியைப் பசிச்சோதிதனில்
வித்தக மெய்கண்ட தேவர் சிவகதிமேவினரே.

(சிவஞான சுவாமிகள்)

---

Printed at the Jothi Press, Madras.